[1997 மார்ச் 17

223--

பல் மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்புதல்

*3216--**திரு. அ. அசோகன்:**

திரு. செ. இராமலிங்கம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரசு மருத்துவமனைகளில் நிரப்பப்படாமல் உள்ள பல் மருத்துவர்கள் பணியிடங்களை நிரப்ப ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு மருத்துவமனைகளில் ஏற்கனவே காலியாக உள்ள பல் மருத்துவர் பணியிடங்களில் 14 பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆணை 3 (டி) எண்.55, நாள் 4-12-1996-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தகுதியான பல் மருத்துவர்கள் தேர்வு செய்ததும், காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்படும்.

முற்பகல் 9-35

திரு. அ. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல் வலி, பல் நோய் அதிகமாகக் கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்குத்தான் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. காரணம், அவர்கள் வெற்றிலைப் பாக்கு போடுவதால், பல்வலி ஏற்பட்டு, அது கேன்சர் வரைக்கும் போய்க்கொண்டிருக்கின்றது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமங்களில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பல் டாக்டர்களை நியமிக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலே 21 மாவட்ட அரசு தலைமையிட மருத்துவமனைகளிலும், 87 வட்டார அரசு மருத்துவ மனைகளிலும், 4 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் பல் மருத்துவர் பணியிடங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன.

1997 மார்ச் 17]

முழுமையாக தாலுக்கா மருத்துவமனைகளில் இந்தப் பணி நிறைவு பெற்றவுடன் அடுத்த கட்டமாக அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. இராமலிங்கம்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா அரசு மருத்துவமனைகளில் புதிய பல் மருத்துவர் பணியிடம் தோற்றுவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள 136 வட்டார அரசு மருத்துவமனைகளில் ஏற்கெனவே 87 இடங்களிலே பல் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மீதியிடங்களிலே ஆண்டுக்கு 10 தாலுக்கா மருத்துவமனைகள் வீதம் இந்தப் பிரிவு வழங்கப்பட்டு வருகிறது. விரைவில் அனைத்து தாலுக்கா மருத்துவமனைகளிலும் பல் மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்ய இந்த அரசு முயற்சி செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 224, திரு. ஜி. எல். வெங்கடாசலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

224--

சித்த மருத்துவப் பிரிவு துவங்குதல்

3973*–திரு. ஜி. எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பாலக்கோடு அரசு மருத்துவமனையில், புதியதாக சித்த மருத்துவப் பிரிவு துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா.வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஏழு தாலுக்கா மருத்துவமனைகளில் ஐந்திலும், பதினொரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருகிறது.